இம்முறை சர்வதேச பாவனையாளர் உரிமைகள் தினத்தின் தொனிப்பொருள் கையடக்கத் தொலைபேசிகளைப் பயன்படுத்துகின்ற உங்களின் பாவனையாளர் உரிமைகளைப் பாதுகாப்போம் !

**Fix Our Phone Rights** (Theme for the year)

*by consumers international*

## பாவனையாளர் என்ற வகையில் உங்களுக்கு உள்ள உரிமைகள்

01. அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்து கொள்வதற்குள்ள உரிமை
02. பாதுகாப்புக்குள்ள உரிமை
03. தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்குள்ள உரிமை
04. செவிமடுக்கச் செய்வதற்குள்ள உரிமை
05. நிவாரணம் பெற்றுக் கொள்வதற்குள்ள உரிமை
06. பாவனையாளர் கல்வியைப் பெற்றுக் கொள்வதற்குள்ள உரிமை
07. சுகாதார ரீதியான சூழலில் வாழ்வதற்குள்ள உரிமை
08. தெரிவு செய்யும் உரிமை

ஒரு பொருளை அல்லது சேவையைக் கொள்வனவு செய்யும் போது ஏமாற்றப்பட்டுள்ளீரா? அல்லது மோசடிக்கு ஆளாகியுள்ளீரா?

உதாரணமாக,

- விற்பனையின் போது அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாமை
- கொள்வனவு செய்த பொருட்கள் அல்லது சேவையின் மூலம் உங்களின் எதிர்பார்ப்பு நிறைவேறாமை.
- உத்தரவாதக் காலத்திற்குள் புதுப்பிக்காமை.
- உற்பத்திசார்ந்த குறைபாடுகளுக்காக ஒரு பொருளுக்குப் பதிலாக மற்றொரு பொருளை மாற்றிக் கொள்ள வாய்ப்பளிக்காமை
- பொருட்களின் விற்பனையின் பின்னரான சேவைகள் வழங்கப்படாமை



**உங்களுக்கு நிவாரணங்களைப் பெற்றுத் தர பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை கட்டுப்பட்டுள்ளது.**

## உங்களின் பிரச்சினைகளுக்காகப் பெற்றுக் கொள்ளக்கூடிய நிவாரணங்கள்

- நட்டஈடு செலுத்தல்
- பொருட்களை மாற்றிக் கொள்ளல்
- புதுப்பித்துக் கொடுத்தல்
- பதிவு செய்துள்ள விலையிலும் பார்க்க மேலதிகமாக அறவிடப்பட்டுள்ள தொகையை திரும்பச் செலுத்தல் / குறைபாடுகள் மிக்க பொருட்களுக்காகச் செலுத்தப்பட்ட பணத்தை மீளப் பெற்றுக் கொடுத்தல்
- உத்தரவாதக் காலத்தைப் பெற்றுக் கொடுத்தல் அல்லது நீடித்தல்
- பொருட்களிலுள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்தல் அல்லது குறைபாடுகள் மிக்க பொருட்களை சந்தையிலிருந்து நீக்குதல்.

உங்களுக்குத் தேவையான மேலதிக விபரங்களைப் பெற்றுக் கொள்வதற்காக

அழைக்கவும்

011-7755487

முறைப்பாட்டுப் பிரிவு 011-7755481-3

உடனடி அழைப்புகளுக்கு - 1977



கடிதத் தொடர்புகளுக்கு

பணிப்பாளர் நாயகம்

பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை

இலக்கம் 27,

வொக்சோல் வீதி,

கொழும்பு 02

தொலைபேசி - பொது 011-7755455-7

பெக்ஸ் - 011-2321696

இணையத்தளம் : www.caa.gov.lk

மின்னஞ்சல் : chairmancaa@sltnet.lk

## மாவட்ட அலுவலகங்களில் உங்களின் முறைப்பாடுகளைச் செய்வீர்களாயின்,

| | |
|---|---|
| கொழும்பு | 011-7755455-7 |
| கம்பஹா | 033-7755455 |
| களுத்துறை | 034-7755455 |
| கண்டி | 081-7755455 |
| மாத்தளை | 066-7755455 |
| நுவரேலியா | 052-7755455 |
| அநுராதபுரம் | 025-7755455 |
| பொலநறுவை | 027-7755455 |
| இரத்தினபுரி | 045-7755455 |
| கேகாலை | 035-7755455 |
| குருநாகல் | 037-7755455 |
| புத்தளம் | 032-7755455 |
| காலி | 091-7755455 |
| மாத்தறை | 041-7755455 |
| ஹம்பாந்தோட்டை | 047-7755455 |
| மொனராகலை | 055-7755455 |
| பதுளை | 055-7755455 |
| திருகோணமலை | 026-7755455 |
| மட்டக்களப்பு | 065-7755455 |
| அம்பாறை | 063-7755455 |
| யாழ்ப்பாணம் | 021-7755455 |
| வவுனியா | 024-7755455 |

பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை மற்றும் இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு இணைந்து மேற்கொள்ளும் சமூகப் பணியாகும்.

கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சு

Fix our phone rights!

சர்வதேச பாவனையாளர் உரிமைகள் தினம் -
2014 மார்ச் 15

## கையடக்கத் தொலைபேசிகளைப் பயன்படுத்துகின்ற உங்களின் உரிமைகள்



**உங்களின் நண்பனாக எப்போதும் உங்களுடனேயே இருக்கும் தொலைபேசியை பயன்படுத்துவது பற்றி நீங்கள் அறியாத சில விடயங்கள்.....**

உங்களின் தேசிய அடையாள அட்டையை வேறு ஒருவருக்கு சிம்அட்டையொன்றைப் பெற்றுக் கொள்ள வழங்கியுள்ளீரா?

**ஒரு போதும் உங்களின் தேசிய அடையாள அட்டையை வேறு ஒருவருக்கு**

**சிம் அட்டையொன்றைப் பெற்றுக் கொள்வதற்காக பயன்படுத்த இடமளிக்க வேண்டாம்.**

## உங்களின் சிம் அட்டை......

உங்களின் பெயரிலேயே பதிவு செய்யப்பட்டுள்ளதா என்பதை அறிந்து கொள்ள உங்களின் தொலைபேசி மூலம் #132# என ரைப் செய்து அனுப்பவும்.

## உங்களின் தொலைபேசி காணாமல் போய்விட்டதா?

ஆமெனில்,

1 தொலைபேசி இணைப்புக்குரிய நிறுவனத்திற்கு அறிவித்து இணைப்பைத் துண்டிக்கவும்.

2 அருகே உள்ள பொலிஸ் நிலையத்தில் இது பற்றிய முறைப்பாடொன்றைப் பதிவு செய்யவும்.

3 கீழே தரப்பட்டுள்ள ஆவணங்களை 14 நாட்களுக்குள் தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கவும்.

- பொலிஸ் முறைப்பாட்டின் பிரதி
- தேசிய அடையாள அட்டையின் பிரதி
- காணாமல் போன திகதி, பயன்படுத்திய தொலைபேசியின் இலக்கம் மற்றும் சிம் இலக்கம் போன்ற விபரங்களை உள்ளடக்கிய கோரிக்கைக் கடிதம்.



தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு வழங்கியுள்ள உரிமப்பத்திரமின்றி தொலைத்தொடர்பு உபகரணங்களை உற்பத்தி செய்தல், இறக்குமதி செய்தல், விற்பனை செய்தல், தன்வசம் வைத்திருத்தல், உரிமையைக் கையளித்தல், வாடகைக்கு விடுதல், குத்தகைக்கு விடுதல், மாதிரியைப் பயன்படுத்தல், பேணிவருதல், பராமரித்தல் போன்ற வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுவது உள்ளிட்ட சகல வகையிலுமான நடவடிக்கைகள் சட்டவிரோதமானதாகும்.

**உங்களின் கையடக்கத் தொலைபேசிகளைக் கொள்வனவு செய்யும் போது சட்டரீதியான இடமொன்றிலிருந்து கொள்வனவு செய்வது மிக முக்கியமானதாகும்.**

உங்களின் கையடக்கத் தொலைபேசி இணைப்புக்குரிய நிறுவனத்திடமிருந்து உங்களுக்கு பாரிய பரிசு

**பதற்றமடைய வேண்டாம்.**

**உரிய தொலைபேசி நிறுவனத்தைத் தொடர்பு கொண்டு அத்தகவல் உண்மையானதா என்பது பற்றி வினவவும்.**

**இவ்வாறான பரிசுகளைப் பெற்றுக் கொள்வதற்காக நீங்கள் மூன்றாம் தரப்பினர்களின் கணக்குகளுக்கு பணம் வைப்பிலிடத் தேவையில்லை.**

## நீங்கள் தொலைபேசியை தவறாக பயன்படுத்துகின்றீரா?

நீங்கள் தொலைபேசியின் அவசியத்தன்மை பற்றி புரிந்து கொண்டு செயற்படல் வேண்டும். அவ்வாறன்றி வேறொருவரை கஸ்டத்திற்கு உட்படுத்தி, அசௌகரியம் ஏற்படும் வகையில் பயன்படுத்தக் கூடாது. அவ்வாறு தவறாக பயன்படுத்தும் பட்சத்தில்............

இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுச் சட்டத்தின் 58 மற்றும் 59 ஆம் இலக்க பிரிவுகளுக்கு அமைய அநாவசியமான தொலைபேசி அழைப்புக்களை வழங்குவதும், குறுஞ்செய்திகளை அனுப்புவதும் தண்டனைக்குரிய குற்றமாகும்.

உங்களின் தொலைபேசிக்கு அநாவசியமான அசௌகரியத்தை ஏற்படுத்தும் தொலைபேசி அழைப்புக்கள், குறுஞ்செய்திகள் வருகின்றனவா?

**பதற்றமடைய வேண்டாம். வினயமாக செயற்படுங்கள். பொலிஸ் நிலையமொன்றுக்குச் சென்று முறைப்பாடு செய்த பின்னர் உரிய நிறுவனத்திற்கும் அறிவிக்கவும்.**

உங்களின் கையடக்கத் தொலைபேசிகள் தொடர்பான பிரச்சினைகளுக்கு வினைத்திறனுடனும், நற்புறவுடனும் சேவைகளை ஆற்றுவதற்கு தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு ஆயத்தமாக உள்ளது.

**மேலதிக தகவல்களைப் பெறுவதற்கான கடிதத் தொடர்புகளுக்கு :**

பாவனையாளர் தொடர்புப் பிரிவு
இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு
இலக்கம் 276,
எல்விட்டிகல மாவத்தை,
கொழும்பு 08



தொலைபேசி அழைப்புகளுக்கு :

உடனடி அழைப்பு - 1900
011-2662222
011-2662215
011-2662216